**சாட்சியின் வாக்குமூலம்**

**திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்**

**அசல் வழக்கு எண் : 488/2021**

**DW1 – திருமதி. விஜயா (எ) யமுனா, க/பெ. தேவராஜ்**

**06.03.2024**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| வட்டம் | : | வயது | : |

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். தாவா சொத்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் 1986ம் வருடம், 2வது வாதிக்கு கொடுக்கப்பட்டது என்று எனது கணவர் சொல்லி எனக்கு தெரியும். அரசு ஆணை எண். 701/1986, நாள். 18.07.1986 அன்று கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தேதி தெரியாது. மேற்படி விவரம் எனது கணவர் சொல்லி எனக்கு தெரியும். 1986ல் காலிமனையாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அப்பொழுது எனது கணவர் தேவராஜிற்கு 7 வயது என்றால் சரியல்ல, 9 வயது ஆகும். எனது கணவரின் பிறந்த தேதி 23.01.1979 ஆகும். 2ம் வாதி சண்முகம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக ஏழைகளுக்கு கொடுக்கப்பட்ட கடன் உதவி பெற்று தாவா சொத்தில் தரை தளம், முதல் தளம், இரண்டாம் தளம் கட்டினார் என்றால் சரியல்ல. தரைதளம் மட்டும் கட்டினார். தரைதளம் மட்டும் கட்டியதாக தவறாக கூறுகிறேன் என்றாலும் 2 தளம் வரை கட்டிய பிறகு 01.03.1995 அன்று பக்கா கிரைய பத்திரம் அவர் பெயருக்கு ஏற்பட்டது என்று சொன்னாலும் சரியல்ல. வா.த.சா.ஆ.1 ல் குறிப்பிட்ட செய்திகள் பற்றி எனக்கு தெரியாது. 2வது வாதி

சண்முகத்திற்கும் அவரது மனைவி சகுந்தலாவிற்கும் 4 பிள்ளைகள். முதல் மகள் பெயர் பச்சையம்மாள் என்ற நளினா. 2வது மகள் பெயர் விஜயா. 3வது மகன் தேவராஜ் எனது கணவர். 4வது மகள் ஜோதி முதல் வாதி. எங்களது திருமணம் 15.04.2013 அன்று நடந்தது என்றால் சரிதான். 2013க்கு முன்பாக அந்த குடும்பத்தில் நடந்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நேரடியாக தெரியாத விசயங்களை பச்சையம்மாள் என்ற நளினா, விஜயா மற்றும் ஜோதி ஆகியோர்களை பற்றி தவறாக எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஜோதியை பற்றி அவருடைய நடத்தையைப் பற்றி தவறாக எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 2013க்கு முன்பாக தேவராஜ் தனது சகோதரிகளிடம் நல்ல உறவுடன் தான் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. திருமணமான பிறகு தாவா வீட்டில் தான் நான் வாழ்ந்தேன். 2013 ம் வருடத்தில் எனது வாக்காளர் அடையாள அட்டை இந்த முகவரியில் தான் உள்ளது. அந்த வருடத்திற்கான ஆதார் அடையாள அட்டை இந்த முகவரியில் இல்லை. நான் பாண்டிச்சேரி வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிந்து இருந்ததால் அந்த காலக்கட்டத்திற்குள் ஆதார் அடையாள அட்டைக்கு பதிய முடியவில்லை. 2013 வாக்காளர் அடையாள அட்டையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தாவா வீட்டின் தரை தளத்தில் திருமணமான முதல் 6 மாதங்கள் எல்லோரும் ஒன்றாக இருந்தோம். அதன்பிறகு என் கணவரின் தங்கை ஜோதி எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டதால் நாங்கள் இரண்டாம் தளத்தில் வசித்தோம். நான் சொல்வது தவறு என்றாலும் ஆரம்பத்திலிருந்தே ஜோதி முதல் தளத்தில் வசித்து வந்தார் என்றாலும் சரியல்ல. வா.த.சா.ஆ.6ன் படி ஆரம்பத்திலிருந்தே ஜோதி முதல் தளத்தில் தான் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் எனது கணவர் என்னை உதைத்ததால் தான் கரு கலைந்தது என்று தவறாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அதன்பிறகு மீண்டும் கருவுற்று பெண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தை கருவுற்றிருந்தபோது வளைகாப்பு புதுச்சேரி திருக்கல்லூரில் நடந்தது என்றால் சரிதான். எனது கணவர் வீட்டில் வளைகாப்பு நடத்தும் பழக்கம் இல்லை என்று சொன்னதால் திருக்கல்லூரில் நடைபெற்றது. பெண் குழந்தை பிறந்ததை எனது கணவருக்கும் குடும்பத்தாருக்கும் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவரையும் அவரது குடும்பத்தாரையும் குழந்தையை பார்க்க

நான் அனுமதிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. குழந்தை பிறந்த பிறகு பேறுகாலத்திற்கு சென்றுவிட்டு நான் மீண்டும் எனது கணவா் குடும்பத்துடன் வந்து சேரவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவருடன் அடிக்கடி போனில் பேசுவேன் என்றால் சரிதான். அவ்வாறு போன் பேசியதில் ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாக 21.11.2020 அன்று என் கணவா் தூக்கிட்டு தற்கொலை செய்துக்கொண்டாா் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவம் ஜே.ஜே.நகா் காவல் துறையினா் சொல்லித்தான் எனக்கு தெரியும். எனது கணவரின் தாயாா் சகுந்தலா கொடுத்த புகாரில் என்னுடன் ஏற்பட்ட சண்டை காரணமாக மன உளைச்சலில் இறந்துவிட்டாா் என்று கூறியுள்ளாா் என்றால் சரியல்ல. முதலமைச்சா் தனிப்பிரிவில் நான் புகாா் கொடுத்தேன். காவல் நிலையத்தில் சமரச பேச்சு வாா்த்தையில் முதல் வாதி கொடுத்த அனுமதியின் பேரில் நான் இரண்டாம் தளத்தில் தங்கினேன் என்று சொன்னால் சரியல்ல. அதன்பிறகு நாங்கள் முதல் வாதி மற்றும் அவரது குடும்பத்தாருடன் தகராறு செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. அதன்காரணமாக எனக்கு கொடுத்த அனுமதி மறுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. முதல் வாதி வா.த.சா.ஆ.7 வழக்கறிஞா் அறிவிப்பு அனுப்பினாா் என்றால் சரிதான். அதற்கு நான் பதில் அனுப்பவில்லை என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் திருமங்கலம், அனைத்து மகளிா் காவல் நிலையத்தில் அழைத்து பேசி முடிக்கப்பட்டதால் நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. திருமங்கலம் போலீசாா் அனுமதி கொடுத்து என்னை தாவா வீட்டில் தங்க வைத்தாா்கள் என்று சொல்வதற்கு எழுத்து பூா்வமாக ஆதாரம் இல்லை. ஆனால், வீடியோ கிளிப் உள்ளது. இரண்டாம் வாதி தாவா நிலத்தை தனது சுய வருமானத்தில் வாங்கினாா் என்றால் சரிதான். ஆனால், அதில் கட்டப்பட்ட வீடு எனது கணவா் தேவராஜ் உடைய வருமானத்தில் கட்டப்பட்டது. அதற்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவை இரண்டாம் வாதி வசம் உள்ளது. அவ்வாறு நிரூபண வாக்குமூலத்திலோ, எதிா் உரையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஆவண எண். 5077/2020 ( வா.த.சா.ஆ.2) மூலமாக இரண்டாம் வாதி, முதல் வாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளாா் என்றால் சரிதான். முதல் வாதி எனக்கு கொடுத்த அனுமதியை ரத்து செய்துள்ளாா் என்றாலும் அதன்காரணமாக எனக்கு மேற்படி சொத்தில் எந்தவித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. அனுமதி கொடுத்த நாளில்

இருந்து இன்று வரை இரண்டாம் தளத்திற்கு நான் மின்சார கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரிதான். நான் தையல் மிஷின் வைத்து தையல் செய்து வந்தேன் என்றாலும் தற்பொழுது ஆசிரியராக தனியார் பள்ளியில் வேலை பார்த்து வருகிறேன் என்றாலும் சரிதான். மின்சார கட்டணம் தற்பொழுது என்னுடைய ஏழ்மை சூழ்நிலை காரணமாக செலுத்த முடியாது என்று தான் கூறியுள்ளேன்.

**(வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- S.Selva Sundari
Principal District and Sessions Judge,
Tiruvallur.